**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, ஆறாம் தவணை - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**6th Term Examination - 2020**

FWC

| தரம் :- 13 (2020) | தமிழ் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி - I

01)

அ)

i. தலைவனுடன் கூடி மகிழ்வதற்கு முன்னர் தனது பூவைப்போன்ற கண்களும், முங்கிலைப்போல் விளங்கும் வெற்றியும் அழகும் பொருந்திய தோடும் பிறைச் சந்திரனோ எனக் காண்பவர் அறிவை மயங்கிடச் செய்யும் நெற்றியும் பெரிதும் நல்ல நிலையிலேயே இருந்தன எனக் கூறுவதன் மூலம் தலைவி தனது அழகினைத் தானே வியப்பது போல இருந்தாலும் தலைவனது பிரிவால் தன்மேனி அழகிழந்துவிட்டது என்பதையே உணர்த்துகின்றாள்

ii. உள்ளுறை உவமையணி
தாழையின் செண்ணிறமான பூ நாரையைப் போல் மலர்ந்துள்ளது எனக் கூறுவதன் மூலம் அப்பூவினை நாரைஎனக் கருதி யாரும் பறிக்காமல் அது வீணாக அழிவது போல் தலைவனும் தனது உண்மை நிலை உணராமையால் தனது நலனும் அனுபவிக்கப்படாமல் வீணாகக் கழித்து விடுமோ எனும் தலைவியின் ஏக்க உணர்வு வெளிப்படுகின்றது.

iii) வேய்-மூங்கில், விறல் - வெற்றி
திரை – அலை , அல்கலும் - இரவுதோறும் (04 + 04 + 04 = 12 புள்ளிகள்)

agaram.lk

ஆ)

i) இலக்குமணன் இரவுபொழுதைக் கழித்த இடம் எது என பரதன் கேட்ட போது குகன் கூறிய சந்தர்ப்பம்.

ii) "அல்லை ஆண்டமைந்த மேனி"- இருளை ஒத்த கரிய திருமேனி.
உவமானம் - அல்
உவமாயம் - மேனி
பொதுத்தன்மை – கருமை
" கல்லை ஆண்டுயர்ந்த தோளாய்"- மலையை ஒத்த உயர்ந்த தோள்களை உடையவனே.
உவமானம் - மலை
உவமேயம் - தோள்
பொதுத்தன்மை – வடிவம்/ வலிமை.

iii)
- இராமனும் சீதையும் உறங்க, வில்லையூன்றியவாறு பெருமுச்சு விட்டபிடி காவல் செய்தல்
- இராமனது நிலை குறித்து கண்ணீர் சொரிதல்
- விடியும் வரை கண்ணிமை மூடாமல் (உறங்காமல்) காவல் செய்தல்

(04 + 04 + 04 =12 புள்ளிகள்)
(12 +12 = 24 புள்ளிகள்)

02) அ)

i)
- ஆள் சுருளும் வெய்யிலில் நடைபாதையில் படுத்திருத்தல்
- உய்யும் வகை தெரியாத மனிதன்
- கை இல்லாதவன்
- துன்புறுத்தி வீங்கும் பசியால் வீழ்ந்தானோ எனப் தூங்குபவன் போல படுத்திருத்தல்
- செத்த உடல் எனக் கருதி கொத்தவரும் காகம்
- குறை உயிரோ செத்த உடலோ தெளிவில்லை

ii)
- காசு வீசப்படும் ஓசை அவனது நிம்மதியைக் கெடுத்து விடும் எனல்
- அவனது உறக்கத்தைக் கெடுக்க வேண்டாம் பாவம் இம்மட்டும் புவியை மறந்திருந்தான் எனக் கூறுவதன் மூலம் உறக்கத்திலாயினும் அவன் நிம்மதியாக இருக்கட்டும் என்கின்ற உணர்வு.

iii)
- ஆம்
- காசினை வீசியெறிதல் அவர்களது செருக்கினை வெளிப்படுத்துகின்றது.
- பிச்சைக் காரனின் அவல நிலை கண்டு நெஞ்சம் நெகிழாமையை உணர்த்துகின்றது.
- காசை வீசுதல் அவனை அவமதிப்பது மட்டுமன்றி அவனது அமைதியைக் கெடுப்பதாகும்.
- பொருளின் மதிப்பை உணராமல் அதை அவமதிப்பதாகவும் அமையும்

iv)
- கவிஞரின் எள்ளல் உணர்வு வெளிப்படுகின்றது
- அவசர உலகில் வாழும் மனிதர்கள் இலக்கின்றி வேகமாகச் செல்கின்றமையை நினைத்து கவிஞரின் எள்ளல் உணர்வு வெளிப்படுத்தப்பட்டுள்ளது
- உலகம் நிலைமாறி பாதாளத்துள் விழாமல் காபப்வரோ என கேலியும் கிண்டலுமாக கூறுகின்றார். (04 + 04 + 04 + 04 =16 புள்ளிகள்)

agaram.lk

ஆ)

i) மொழியின் பண்பைப் பற்றிய ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டே இலக்கிய விமரிசனம் தோன்றுகின்றது.

ii) தத்துவரீதியான இலக்கிய விமரிசனம்.
சரித்திரரீதியான இலக்கிய விமரிசனம்
வாழ்க்கைச் சரித ரீதியிலான இலக்கிய விமர்சனம்
ஒப்புமை ரீதியான இலக்கிய விமர்சனம்

iii)
- இலக்கியம் என்பது ஒருகலை
- இலக்கிய மொழிப்பண்பு பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டும்
- இலக்கிய வளர்ச்சி என்பது அதற்கு முன்பிருந்த இலக்கியங்களோடு தொடர்பு கொண்டிருக்கும்
- இலக்கியம் ஆகாயத்தில் முளைப்பதன்று
- ஒரு சமுதாயத்தில் வாழ்ந்த ஒருவனது அனுபவம்

iv)
- உரைநடை எளிமையானது
- தர்க்க ரீதியான மொழிநடை.
- பெரும்பாலான இடங்களில் சிறு வாக்கிய அமைப்பு
- ஆற்றோட்டமான தெளிவான நடை (4 + 4 + 4 + 4 = 16புள்ளிகள்)

## பகுதி – II

03) அ) – செருக்கு, கோபம், காமம், உலோபத்தன்மை, குறுகிய மானஉணர்ச்சி, வரம்பு மீறியமகிழ்ச்சி எனும் ஆறுவகையான குற்றங்களை இரு குறட்பாக்களில் விளக்கியுள்ளார்

- அகந்தை,கோபம்,காமம் ஆகிய மூன்று குற்றங்களும் இல்லாதவரின் செல்வம் மேம்பாடன இயல்பினை உடையது
- உலோபததனம், மாட்சிமை இல்லாத மான உணர்வு, அளவில்லா மகிழ்ச்சி என்பன அரசனுக்கு குற்றங்களாகும்.

ஆ) குற்றங்கடிதல் பொதுவகை

- பழிக்கு அஞ்சுபவர் தினை அளவாகக் குற்றம் செய்தாலும் பனை அளவாகக்கருதிக் கொள்வர்
- ஒருவனுக்கு அழிவைத் தரும் பகை குற்றம் அக்குற்றம் ஏற்படாமல் இருப்பதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்
- குற்றம் 'ஏற்படுவதற்கு முன்னரே தன்னைக் காத்துக் கொள்ளாதவனின் வாழ்க்கை நெருப்பில் இடப்பட்ட வைக்கோல் போல ஏரிந்து அழித்து விடும்
- முதலில் தனது குற்றத்தை நீக்கி பின்னர் குற்றத்தை ஆராயந்து காணக் கூடிய அரசனுக்கு ஒரு குற்றமும் ஏற்படாது

இ) குற்றங் கடிதல் சிறப்பு வகையால் கூறல்.

உலோபத்தின் தீமை

- பொருளால் செய்யவேண்டியவற்றைச் செய்யாமல் அதன் மீது பற்றுக் கொண்ட உலோபியின் செல்வம் நிலைத்திருக்க இடமின்றி அழியும்
- பொருளில் பற்றுக் கொண்டு எவருக்கும் வழங்காத உலோபத்தன்மை எக்குற்றத்தினுள்ளும் அடக்கப்படுவதொன்றல்ல அது தனிக் குற்றமாகும்.

மதமானங்களின் தீமை

- ஒருவன் எக்காலத்திலும் தன்னை பெரிதாக எண்ணி வியந்து பேசக்கூடாது நன்மை தராத செயலையும் விரும்பக் கூடாது.
- ஒருவன் தனது விருப்பங்களை பலர் அறிய அனுபவிக்க முயன்றால் பகைவர் சூழ்ச்சியால் அது பயனின்றிப் போய்விடும் எனவே ஒருவன் தான் விரும்புவதை பிறர் அறியாமல் நடந்து கொள்வானாயின் பகைவர்களால் அவனை ஒன்றும் செய்ய முடியாது.

ஈ) "எதிரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்

- உவமானம் - நெருப்பின் முன் வைக்கப்பட்ட வைக்கோல் போர்
- உவமேயம் - குற்றம் வருமுன்னர் காத்துக் கொள்ளாதவனின் உயர் வாழ்க்கை.
- பொதுத்தன்மை – பேரழிவு (04 + 06 + 06 + 04 = 20 புள்ளிகள்)

04).

அ) கோசலையின் பெருமைகள்

- சுற்றத்தவர்களும் தேவர்களும் தொழும்படியான சிறப்பினை உடையவள்
- தசரதனின் மூத்த மனைவி
- மூன்று உலகங்களையும் படைத்த பிரமதேவனைப் படைத்த திருமாலகிய இராமபிரானைப் பெற்றவள், பூங்கொடிபோல் மென்மையானவள்.

சுமித்திரையின் பெருமைகள்

- தரும தேவதையே என்று சொல்லத்தக்கவள்
- அன்பினால் நிறைந்து விளங்குபவள்
- தசரதச் சக்கரவத்தியின் இளைய மனைவி
- இராமனை விட்டு நீங்காத தம்பியான இலக்குமணனைப்பெற்ற பெருமைக்குரியவள்

agaram.lk

ஆ) கைகேகியின் சிறுமை

- தனது கணவனாகிய தசரதசக்கரவர்த்தி சுட்டெரிக்கும் இடமான மயானம் செல்லக் காரணமானவள்
- தனது மகனாகிய பரதன் துன்பக் கடலில் முழ்கும்படி செய்தவள்
- கருணை நிரம்பிய கடல் போன்ற இராமணன் கொடிய கானகம் செல்லச் செய்தவள்
- திருமால் வாமன அவதாரத்தின் மூலம் அளந்த மூவுலகங்களையெல்லாம் தன் மனதில் எண்ணிச் செய்யும் கொடுமையால் அளந்தவள்
- துன்பங்களை எல்லாம் உண்டாக்கியவள்
- பழியாகிய குழந்தையை வளர்க்கும் தாய்
- கைகேயின் வயிறைப் "பாழ்த்த பாவிக் குடர்" எனல்
- எல்லோரும் வருந்தத் தான் மட்டும் வருந்தாத முகத்தை உடையவள்

இ) பரதனது கழிவிரக்கம்

- கோசலை இராமபிரானை தன்மகனாகப் பெற்றதால் அடைதற்குரிய செல்வத்தை, நான் பிறந்ததால் இழந்தவள் எனக் கோசலையின் துயரத்திற்கு தானே காரணம் எனல்
- தீவினையை உடைய கைகேயின் வயிற்றில நீண்ட காலம் தங்கியருந்ததால் இன்று நானே உயிர்பாரம் குறைத்து தேய்வடையும் படி ஆனேன் எனத் தன்மீது கழிவிரக்கம் கொள்ளல்

ஈ) குகனது செயற்பாடு

- உறவினர்களும் தேவர்களும் வணங்கிகும்படி நின்ற கோசலையைத் தொழுதல்
- கோசலையின் பாதங்களில் வீழ்ந்து அழுதல்
- இரக்கமில்லாத கைகேகியியையும் தன்கரம் குவித்து வணங்குதல்

குகனது சிறப்புகள்

- இராமனுக்கு இணையதோழன், இலக்குமணனுக்கும் சத்துருக்கனுக்கும், தனக்கும் தமையனாகத் தகுதி உடையவன் எனப் பரதன் கூறல்
- குகனைத் தோழனாகப் பெற்றாதல் இராமஇலக்குமணன் காடு சென்றதும் நலமாயிற்று என கோசலை கூறுதல்
- கை வீரக் களிறு அனைய காளை

(05 + 05 + 05 + 05= 20 புள்ளிகள்)

5) அ) - வருடப்பிறப்புக் கொண்டாட்டத்தை சிறப்பாகக் கடைப்பிடித்தல்

- முற்றம் கூட்டி சாணகத் தண்ணீர் தெளித்தல்
- பழங்கறி உண்வதில்லை
- காலை உணவாக பிட்டு முட்டைப்பெரியல்

முட்டைக்கோப்பி,மதிய உணவாக இறைச்சி,சோறு நண்பருடன் சாராயம் அருந்துதல்

- மருத்துளிர் வைத்து முழுகுதல் ,புத்தாடை அணிதல்
- கைவிசேடம் கொடுத்தல் பஞ்சாங்கம் பார்த்தல்
- குடும்ப உறவினர் ஒன்று கூட்டி மகிழ்த்தல். கொண்டாட்டத்திற்காக லீவு எடுத்து ஊர் வருதல்.

ஆ) - குமாராசாமி தன்னை விட வயதில் மூத்த தமையன் மற்றும் இரு பெண்கள் இருக்க பிறமதத்தைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்தமையால் முகத்தார் சமூகத்தாலும் குடும்பத்தவராலும் உள நெருக்கிட்டிற்கு உள்ளாகுதல்

- அதே நாக்குகள் திசை திருப்பி அவரை மல்லாத்திக் கிடத்திக் குறி சுட்டது
- பிஞ்சிலே பழுத்தவன் தமையன் இருக்கக் கூடியதாக இரண்டு குமருகள் வீட்டுக்குள்ள பெருமுச்சுவிட்டுக் கொண்டிருக்கக கூடியதாக இவனுக்குக் கலியாணம் அதுவும் ஊர் பேர் தெரியாத வேதக்காரிச்சியாம்... தூ... இவன்ரை படிப்பு நாக்கு வழிக்கத்தான் உதவும், இவன் தன்ரபடிப்பைத் தூக்கி எறிஞ்சு போட்டு கக்கூசு வாளியைத் தூக்கித் திரியட்டும்
- இத்தகைய வார்த்தைகள் முகத்தாரின் மார்பு மயிரைப் பொசுக்கி இதயக் குலையை வெதுப்பியதாகக் கூறல்
- நன்மை தீமைகளுக்கு முகத்தார் வீட்டுக்கு வந்து பழகிய வர்கள் வீட்டுப்படலையைத் திறக்க முகஞ் சுழித்துக் காட்டியமை
- குடும்பத்தவரும் குமாராசமியை வீட்டுக் கொண்டாட்டங்களுக்கு எதிர்பார்ப்பதில்லை.

agaram.lk

- இக் காரணங்களால் முகத்தார் இந்தப் பென்னம் பெரிய உலகில் தன்னந் தனியாக விடப்பட்ட உணர்வுகளுடன் தத்தளித்தார்.

இ) குமாரசாமி மீதான பாசம்
- குமாரசாமியைப் புதுவருடக் கொண்டாட்டதற்கு வீட்டிற்கு வர எதிர்பார்த்தல்
- அவன் வருவான் என்பதை அறிந்ததும் மகழ்வடைதல் நெஞ்சிற் குத்திக் கொண்டிருந்த முள், ரோஜா இதழ் படுக்கைக்குள் இனிதாக மறைகின்றது.
- குமாராசாமியை ஏனையோர் ஒதுக்கிய போதும் தான் ஒதுக்கி வைக்காமை
- அவன்தான் ஒருபுத்தியிலை செய்திட்டான். இனி விரலை வெட்டியே எறியிறது?
- குமாரசாயின் வீட்டுக்குச் சென்று குடும்பத்தவருடன் பழகுதல், பேரப்பிள்ளைகளில் பாசம் கொள்ளுதல்
- வீட்டார்கள் குமாரசாமியைக் குன்ற கூறினாலும் அவனை விட்டுக் கொடாமை
- இஞ்சி பிஸ்கட்டை உண்ணுதல் குமாரசாமி பற்றிய பெருமிதம்
- ஏனைய பிள்ளைகள் ஆறுமுகத்தாரின் பிள்ளைகள் என்றால் தான் ஊர்தேசத்துக்குத் தெரியும் மருமக்களும் அவ்வாறே
- ஆனால் தன்னை குமாரசாமியன் அப்பன் என்றால்தான் தெரியும் எனப் பெருமிதம் கொள்ளுதல்
- பேருந்தில் செல்லும் போது அமர்ந்திருந்த ஒருவன் குமாரசாமியின் தந்தை என்பாதல் எழுத்து இடம் கொடுத்ததை நினைத்துப் பெருமிதம் கொள்ளல்

ஈ)
- யாழ்ப்பாண மக்களின் கிராமிய மொழிவழக்கு
- விபரணத் தன்மையான மொழிநடை
- கவித்துவம் செறிந்த மொழிநடை
- எவரும் கையாளாத அரிய பிரதேச வழக்குச் சொற்களைக் கையாளுதல்
- அணிப் பயன்பாடு (06 + 04 + 06 + 04 = 20 புள்ளிகள்)

6. அ) இலக்கியம் பற்றிய வரை விலக்கணம்
- ஒருவரது கல்வி,பயிற்சி,உணர்வு,அனுபவம்,உலகுநோக்கு என்பவை கவிதையின் உயிர்நாடி
- சொல்லலங்காரம்,சப்தநயம், உவமை,உருவகம் முதலிய சிறப்புகள்
- உணர்வினைத் தாக்கி வாழ்க்கைக்குப் புதிய விளக்கத்தைத் தரவல்ல கருத்துகள்

ஆ) - மொழியாற்றல் முதலியவற்றைக் குறைவின்றிப் பெற்றிருத்தல்
- தாம் வாழும் காலத்துச் சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்சனைகளை அறிந்து அவற்றுக்குப் பரரிகாரம் காண முற்படுதல்
- தனது காலத்தின் அவலங்களை உணர்வு பூர்வமாகவும் அறிவு பூர்வமாகவும் தெளிந்து கொள்ளும் தன்மை
- சொந்த அனுபவங்களை மாத்திரம் பொருளாகக் கொள்ளாது, மனுக்குலத்தின் நிலைமையினை உணர்த்து, அதனோடு தான் கலந்து எழுதுதல்
- காலத்தைக் கடந்து சிந்தித்துச் செயலாற்றுதல்

இ) - உலகின் பல பகுதிகளில் பாரதிக்கு அஞ்சலி செலுத்தப்படுகின்றது
- சில மொழிகளில் பாரதியின் ஆக்கங்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.
- அனைத்திந்தியக் கவியாகவும் உலகப் பெருங்கவிஞனாகவும் பாரதி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளமை
- பாரதியாரின் கவிதைகளையும், கட்டுரைகளையும் ஏனைய படைப்புகளையும் தமிழுலகம் உவந்து அங்கீகரித்துக் கொண்டுள்ளது.
- பாரதியின் அபிப்பிராயங்கள் பலவற்றையும் அடிப்படை உண்மைகளாக ஏற்றுக் கொண்டுள்ளது
- பெருங்கவிஞன் தனது சொந்த அனுபவங்களை மாத்திரம் பொருளாகக் கொள்ளாது மனுக்குலத்தின்

agaram.lk

- நிலைமையை உணர்ந்து அதனோடு தான் கலந்து எழுதுவான் அத்தகைய பண்புடையவனாகப் பாரதி விளங்குகின்றமை
- அடிமைப்பட்ட சமுதாயத்தில் பிறந்த பாரதி அடிமைத்தனத்தை உள்ளும் புறமும் கண்டு உலகை நோக்கியவன் அவை சிதறக் குரல் கொடுத்தவன்

ஈ) - வள்ளுவர், கம்பர்,இளங்கோ ஆகியோர் மகாகவிகளாக விளங்கினர்.
- பாரதியார் பெருங்கவிஞராக இம்மூவரையுமே சுட்டியுள்ளமை
- கல்வியிற் பெரியார் கம்பர்- முதுமொழி
- வள்ளுவரின் குறளை எடுத்தாளாத தமிழ்ப்புலவர்களே இல்லை.
- சிலம்பின் செல்வாக்கு நாட்டாரிலக்கியம் வரை படர்ந்துள்ளது.
- வையத்தில் மானுடன் வாழ்வாங்கு வாழ வழிகாண முற்பட்டவன் வள்ளுவன்
- இராம இராச்சியம் என்ற கற்பனைக்கு அடிப்படையான இலட்சியமான அரசு ஒன்றை இலக்கியத்தில் உருவாக்கியவன் கம்பன்
- அறம் அரசியல்,வாழ்க்கை இவற்றுக்கிடையிலான நெருங்கிய தொடர்பினைக் குடிமக்கள் காவியம் மூலம் காட்டியவன் இளங்கோ
- மானுடம் வென்றதம்மா என்றான் - கம்பன்
- இவர்கள் மூவரும் தனி ஒரு அரசனையோ தெய்வத்தையோ, வள்ளலையோ, குலம் சாதி என்பவற்றையோ பாடியவர் அல்லர் மனுக்குலம் ஒன்றையே பாடினர்

( 05 + 05 + 05 + 05 = 20 புள்ளிகள்)

7) அ. இயேசு கிறிஸ்து
- பாவத்தால் இறைவனைப் பிரிந்த மக்களை இரட்சித்து இறைவனுடன் மீண்டும் இணைக்கப் பிறந்த தேவகுமாரன்
- விண்ணுலகும் மண்ணுலகும் வணங்கும் தெய்வம்
- சொற்களால் வாழ்த்தப்பட முடியாதவர்
- எளிமையான வாழ்வைத் தெரிந்து கொண்டவர்
- திருமறையின் தலைவன்

ஆ) மரியாள்
- கதிரவனை ஆடையாக் கொண்டவள்
- நிலவைப் பாதங்களில் அணிந்தவள்
- விண்மீன்களை முடியில் சூடியவள்
- இறைவனுக்கு இவ்வுலகத் தாயாகும் சிறப்பைப் பெற்றவள்
- இறைவனின் திட்டத்தை அறிவிக்கும் வல்லமை உடையவள்
- கன்னிமைக்குக் களங்கம் வராமல் மைந்தனைப் பெற்றவள்

agaram.lk

இ) சூசை
- பெருந்தவத்தோன்
- மரியாளுக்குச் சிறந்த கணவனாக வாய்த்தவன்
- இயேசுவுக்கு இவ்வுலகத் தந்தை எனும் சிறப்பு பெற்றவன்

ஈ) இடையர்
- இறை அவதாரம் பற்றிய செய்தியை முதலில் அறிவிக்கப்பெறும் பேற்றினைப் பெற்றவர்கள்
- திருக்குழந்தையை நேரில் கண்டு வணங்கும் வாய்ப்பினைப் பெற்றவர்கள்
- மரியாள், இயேசு, சூசை ஆகியோரைத் தமது உயிரெனப் போற்றியவர்கள்
- தமது அன்பின் வெளிப்பாடாக காணிக்கை அளித்தவர்கள்

(05 + 05 + 05 + 05 = 20 புள்ளிகள்)

8) அ) - புகார் நகரத்தின் கதிரவன், சந்திரன் பற்றிய காட்சி விபரிப்பு
- கதிரவன் மறைவினால் தாமரை இதழ் குவித்தல்
- தாமரையில் அகப்பட்ட தன்பெடையை அன்னச் சேவல் மீட்டெடுக்கும் காட்சி விபரிப்பு
- பறவைகள், விலங்குகளின் இயல்பான நடத்தை விபரிப்பு
- அந்திப் பொழுதில் மணிதர் தம் செயற்பாடுகள் பற்றிய விபரிப்பு

ஆ)- அரங்கனைத் தரிசிக்க வேண்டும் என்ற நெடுநாள் ஏக்கம் திடீரென்று நிறைவேறியமையால் அடைந்த பரவசம்

- அவனது திருமேனியில் இருந்து கண்கள் எடுக்க முடியாமல் நிற்றல்
- அரங்கனின் பாதாதாதி கேசத்தைக் கண்டு அனுபவித்து உயிரும் உள்ளமும் ஒன்றாகிய பரவச நிலை
- அவனது பெருமைகளையும் திருமேனி அழகையும் கண்டு உள்ளம் நிறைதல்
- ஐயோ நிறை கொண்டது என்நெஞ்சினை-----
- திருமேனி அழகைத் கண்ட கண்ணால் வேறொன்றைக் காண விரும்பாமை
- பரவசத்தால் அறிவழிந்த நிலைமை.

இ) பௌதிக ரிதீயானவை

- வானம் தகதகத்தால், விண்ணெல்லாம் பொன்னொளி
- காரிருள் விலகுதல்
- கடல் பொங்கி ஆர்ப்பரித்தல், பிரவாகித்தல் ஒளிமையாகுதல்
- வான்,மண், மலை, சோலை என இயற்கை அனைத்திலும் ஒளி பரவுதல் உளரீதியானவை
- உலகமிசை உணர்வெழும்புதல்
- சோம்பல் விலகுதல்
- தூக்கத்தில் ஆழ்ந்திருந்த உலகை எழுப்பி நடத்துதல்
- மக்கள் உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படல்
- அதனால் கவிதைகள்,கைத்தொழில்கள் விருத்தியுண்டாதல்
- மக்கள் எல்லாத் திசைகளிலும் உள்ள அறிவினைப் பெறுதல்

ஈ) - உழைக்கும் மக்களிடையே, அவ்வுழைப்பினைச் சுரண்டிச் சுகியவர்களுக்கு எதிராக ஒன்றுபட்டுப் போராடும் உணர்வினைத் தூண்டுதல்

- செல்வந்தர்களின் வாழ்க்கைக்குத் தொழிலாளரின் உழைப்பே காரணம் எனக் கூறல்
- ஆக்கத்திற்குப் பயன்படுத்திய கைகளை முலாளிகளின் அழிவுக்காகப் பயன்படுத் வேண்டுமெனத் தூண்டுதல்

(உ)

- கந்தப்பு, மனோகரன் எனும் இருபாத்திரங்கள் வாயிலாக துயரம் வெளிப்படுத்தப்படல்
- கந்தப்பு – பிள்ளையின் அகால மரணம்
- மனோகரன் - மனைவி கள்ளக் காதலனுடன் ஓடிப்போதல் ஒவ்வொருவரது துயரமும் அவர்களுக்கு வலிதானது என்பதை பாத்திரங்களுக்கு இடையே ஏற்படும் மோதுகை மூலம் வெளிப்படுத்தல்
- முரண்பாடுகள் மூலம் முடிவுகள் எட்டமுடியாத நிலை
- இவற்றினை நாடக நிகழ்வுகளை எடுத்துக்காட்டி மாணவர்கள் விளக்குதல் வேண்டும்

(10 x 02 = 20 புள்ளிகள்)

agaram.lk

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, ஆறாம் தவணை - 2020

Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
6th Term Examination - 2020

FWC

| தரம் :- 13 (2020) | தமிழ் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி - I

1)

| | | | |
|---|---|---|---|
| 1.1. 4 | 1.6. 3 | 1.11. 1 | 1.16. 5 |
| 1.2. 1 | 1.7. 2 | 1.12. 3 | 1.17. 5 |
| 1.3. 2 | 1.8. 5 | 1.13. 4 | 1.18. 2 |
| 1.4. 2 | 1.9. 1 | 1.14. 2 | 1.19. 1 |
| 1.5. 2 | 1.10. 1 | 1.15. 1 | 1.20. 2 |

(01 x 20 = 20 புள்ளிகள்)

2) (அ) சுருக்கம்

- மனிதன் பெற்றுள்ள அற்புதமான கருவிமொழி
- கருத்து வெளிப்பாட்டின் சாதனம்
- காலத்தால் பல மொழிகள் அழிந்து போக சில நிலைத்துள்ளான அவற்றுள் தமிழ் மொழியும் ஒன்று
- முன்னோர்களைப்போல் இம்மொழியைப் போற்றி வளர்ப்பதனூடக எதிர் காலத்தில் அழியாமல் காக்க முடியும்.
- இலக்கியம்,இலக்கணத்தினூடாகத் தமிழ் மொழியின் சிறப்பை அறிய முடியும்.
- இலக்கணமின்றி மொழியைப் பயன்படுத்தக்கூடாது.

(13 புள்ளிகள்)

(ஆ) (i) புலவன் கற்பனைத்திறனிலும் மொழியாற்றலிலும் எம்மிலும் பன்மடங்கு சிறந்து விளங்குவதால், அவனாற் கவிதை புனையமுடிகின்றது எம்மால் முடிகிறதில்லை.

(ii) எமது அனுபவம் ஆழம் அல்லது தெளிவு இல்லாததல் அதனை தெளிவாக வெளிப்படுத்த முடிவதில்லை.
இந்நிலையில் சிறந்த அனுபவத்தைப் பெற புலவனின் உதவியை நாட வேண்டியுள்ளது. குளிர்ந்த சந்திரனைக் காணும் பொழுது எமக்கு இன்ப உணர்வு ஏற்பட்டாலும் நாம் அதில் அழுந்துவதில்லை. ஆனால் புலவன் அதில் அழுந்துவதால் அவனது அனுபவத்தின் மூலம் நாம் பரவசமடைகிறோம்.

(iii) அக்கவிதைக்குரிய மனோநிலையினை ஏற்படுத்த அதைப் பலமுறை படிக்க வேண்டும்.
அதைப் படிக்கும் போது ஊக்கமும் உள்ளக் கிளர்ச்சியும் இருத்தல் வேண்டும்.
அதன் கண் உள்ளத்தைத் தோய விடுதல் வேண்டும்.

agaram.lk

(iv) கவிதையை யாத்த புலவனுடைய அனுபவம் எமக்குப் புலனாகும். அதன் மூலம் சொல்லற்கரிய இன்பத்தை அடையலாம் இது அமரவாழ்வைத் தருகின்றது.

(v) புலவனுடைய அனுபவத்தை போல் எமது அனுபவத்துக்கு ஆழம் அல்லது தெளிவு இருப்பதில்லை.

(vi) உயர்ந்த கவிதையை பன்முறை படிப்பதனூடாக அது குறிக்கும் பொருள், உணர்ச்சி, அனுபவம் என்பனவற்றைக் கிரகித்துக் கொள்ள முடியும்.

(02 x 06 = 12 புள்ளிகள்)

[13 + 12 = 25 புள்ளிகள்]

3) கட்டுரை

| | | |
|---|---|---|
| பொருள் | = | 12 புள்ளிகள் |
| மொழிநடை | = | 08 புள்ளிகள் |
| அமைப்பு | = | 05 புள்ளிகள் |

(25 புள்ளிகள்)

## பகுதி – II

4) (அ) குறுந்தொகை
அகநானூறு
நற்றிணை
ஐங்குறுநூறு
கலித்தொகை
குறிஞ்சிப்பாட்டு
முல்லைப்பாட்டு
பட்டினப்பாலை

agaram.lk

(ஆ) முதற்பொருள் - நிலமும் காலமும்

கருப்பொருள் - நிலத்திலுள்ள மரம், பறவை, விலங்கு, உணவு, வாத்தியங்கள், தெய்வம் முதலியன.

உரிப்பொருள் - நிலத்துக்குரிய அக ஒழுக்கம்
குறிஞ்சி – புணர்தல், முல்லை - இருத்தல்
மருதம் - ஊடல், நெய்தல் - இரங்கல்
பாலை – பிரிதலும் உடன் போக்கும்.

- மாணவர்கள் இவற்றினைக் குறிப்பிடுவதோடு அகத்திணைப் பாடல்கள் ஒன்றோ பலவற்றையோ எடுத்துக்காட்டி விளக்குதல் வேண்டும்.

(இ)
- அகத்திணை, புறத்திணை என்பன இயற்கைசார் மரங்கள், பூக்கள் முதலியவற்றால் சுட்டப்பெறுதல்.
- உள்ளுறை உவமையணி, இறைச்சி, உவமை முதலான அணிகளில் இயற்கையைப் பயன்படுத்துதல்.
- முதல், கருப்பொருட்களுக்கு இயற்கை அடிப்படியாக அமைதல்.
- நூல்களிற்கு இயற்கையின் பெயரிடல்.
  குறிஞ்சிப்பாடல், முல்லைப்பாடல், நெடுநெல்வாடை, பட்டினப்பாலை.

- புலவனது பெயர் இயற்கையினை அடிப்படையாகக் கொண்டிருத்தல்.
  செம்புலப்பெயனீரார், காக்கை பாடினியார், அணிலாடு முன்றிலார்.
- புலவனின் தனிப்பட்ட உணர்வு நிலையை வெளிப்படுத்த இயற்கையைக் கையாளுதல்.

(05 + 05 + 05 = 15 புள்ளிகள்)

5) (அ)

| <u>பெருங்காப்பியங்கள்</u> | <u>உயர் காவியம்</u> |
|---|---|
| சீவகசிந்தாமணி | கம்பராமாயணம் |
| வளையாபதி | |
| குண்டல கேசி | |

| <u>சிறுகாப்பியங்கள்</u> | <u>புராணக் காவியங்கள்</u> |
|---|---|
| நாககுமார காவியம் | பெரிய புராணம் |
| யசோதர காவியம் | கந்த புராணம். |
| உதயணா குமார காவியம் | |
| நீலகேசி | |
| சூளாமணி | |

(ஆ)
- சோழர் காலத்திலிருந்து பயன்படுத்தப்பட்டு வந்த விருத்தப்பா பிற்காலத்துக் காவிய மரபிலும் தொடர்ந்தது
- வடமொழிக் கதைகள், வடநூற் கருத்துக்கள் தொடர்ந்து பிற்காலத்திலும் காவிய மரபில் இடம் பெற்றுள்ளன.
  கம்பராமாயணம், சீவகசிந்தாமணி, போன்றவை பிற்காலத்தில் நைடதம், வில்லிபுத்தூரின் பாரதம் போன்ற காப்பியங்கள் தோன்ற வழிகாட்டிகளாக அமைந்தன.
- சேக்கிழாரின் பெரியபுராணம் பிற்காலத்தில் திருவிளையாடற்புராணம், காசிக்காண்டம், கூர்மபுராணம், சேது புராணம், திருப்பரங்கிரிப்புராணம் முதலானவை தோன்ற முன்னோடியாக அமைந்தது.
- சோழர் காலக் காவிய மரபில் அமைந்த விஸ்தாரமான வர்ணனைப் போக்கும் அணியலங்காரங்களும் பிற்கால இலக்கியங்களிலும் இடம் பெற்றன.
- சமயச்சார்பான காப்பியங்கள் பிற்காலத்தில் தோன்றுவதற்கும் சேழர் காலக் காவிய மரபு முன்னோடியாக அமைந்தது. தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம், போன்ற நூல்கள் தோன்றின.
- நவீன இலக்கியங்களிலும் காவியச் செல்வாக்குக் காணப்படுகின்றது.

(இ)
- நாயன்மார் முதலியோரால் பாடப்பட்ட தேவார, திருவாசகப் பதிகங்களை முறையாக வகுத்துத் திருமுறைகளைத் தொகுத்தவர்.
- அதன் மூலம் அவற்றை அழியாமற் காத்தவர்.
- இவர் ஆக்கிய நூல்கள்
  ஆளுடை பிள்ளையார், மும்மணிக்கோவை,
  திருத்தொண்டர் திருவந்தாதி ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்
- இவரது இலக்கியங்கள் 11 ஆம் திருமறையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(06 + 06 + 03 = 15 புள்ளிகள்)

agaram.lk

6) (அ) • கரவை வேலன் கோவை – நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்.

• தண்டிகைக் கனகராயன் பள்ளு – மாவை சின்னக்குட்டிப்புலவர்.

(ஆ) கல்வளையந்தாதி – நல்லூர் சின்னதம்பிப்புலவர்.

மறைசையந் தாதி – நல்லூர் சின்னத்தம்பிப்புலவர்.

புலியூர் அந்தாதி – மாதகல் மயில்வாகனப்புலவர்.

(இ) கண்ணியவளை குருநாத சுவாமி கிள்ளை விடுதூது – வரதபண்டிதர்.

பஞ்ச வன்னத் தூது - இணுவில் சின்னத்தம்பிப்புலவர்.

(இவை குறித்து விளக்கப்படுதல் வேண்டும்.)

(05 + 05 + 05 = 15 புள்ளிகள்)

7) அ) நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்

- ஒல்லாந்தர்காலம் - வாழ்க்கைக் குறிப்பு
- இளமையில் கவிபாடும் ஆற்றல்
- சிற்றிலக்கியங்கள் பல பாடியமை
  கல்வளையந்தாதி
  மறைசையந்தாதி
  கரவைவேலன் கோவை
  பறாளை விநாயகர்பள்ளு
- ஈழத்துக் கவிதைச் செல்நெறியின் ஊற்றுக்கண் என்று பண்டிதணி முதலானவர்களாற் பாராட்டப்பட்டமை

ஆ) சி. வை. தாமோதரம்பிள்ளை

- கல்விப் புலமை அவர் வகித்த பதவி
- சங்க இலக்கியங்களையும் தொல்காப்பியத்தையும் பதிப்பித்தமை
- ஏனைய பல இலக்கிய இலக்கண நூல்களைப் பதிப்பித்தமை
- அருடைய பதிப்புச் சிறப்புகள்
- அவர் பாடிய செய்யுட்கள்
- அவர் எழுதிய உரைநடை நூல்

இ) முகம்மது காசிம் சித்திலெப்பை

- அறிமுகம், கண்டி – வழக்கறிஞர்
- ஈழத்தின் முதல் நாவல் - அசன் பேயின் கதை (1885)
- பத்திரிகை – முஸ்லிம்நேசன், ஞானதீபம்
- கதை – அபுநவாஸின் கதை
- நூல்கள் - உமர்பாஷாவின் யுத்த சரித்திரம்
  இலங்கைச் சோனகர் கதை
  அஷ்ராருல் ஆலம் முதலியன
- கட்டுரைகள் - சமயம், வரலாறு, பண்பாடு தொடர்பானவை

ஈ) மஹாகவி

- இயற்பெயர் - து. உருத்திரமூர்த்தி
- கவிதைத் தொகுபுகள் - வள்ளி, குறும்பா, வீடும் வெளியும், மஹாகவி கவிதைகள்
- காவியங்கள் - ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், மஹாகவியின் ஆறு காவியங்கள்
- பா நாடகங்கள் - கோடை, புதியதொருவீடு
- இசைப்பாடல் - மாநிலத்துப் பெருவாழ்வு
- வில்லிசைப்பா – கண்மணியாள் காதை
- ஈழத்து நவீன கவிதை மூலவர்
- நடைமுறை வாழ்வியலை யதார்த்த பூர்வமாகச் சித்திரித்தவர்
- பேச்சுத் தமிழ்ப்பயன்பாடு

(07 $\frac{1}{2}$ + 07$\frac{1}{2}$ = 15 புள்ளிகள்)

8) அ) i) யாழ் மாவட்ட இளைஞர் சங்கத்தின் ஏற்பட்டில் சுந்தரமூர்த்தி படுகொலை செய்யபட்டாரா? அல்லது படுகொலை செய்யப்பட்ட சுந்தரமூர்த்திக்கு யாழ் மாவட்ட இளைஞர் சங்க ஏற்பாட்டில் அஞ்சலி செலுத்தப்பட்டதா? என்பது பொருள் மயக்கத்தை தருகின்றது.

ii) கால வழு காணப்படுகின்றது.
நேற்றிரவு கொழும்பு புகையிரத நிலையத்தில் இருந்து புறப்பட்ட யாழ்தேவி இன்னும் சற்று நேரத்தில் யாழ்ப்பாணப் புகையிர நிலையத்தை வந்தடையும் என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

iii) - மக்கள் திருடனைப் பிடித்துக் காவல்துறையினரிடம் ஒப்படைத்தனர்
- அறிஞர்கள் பலர் சபையில் வாதிட்டனர்

iv) தான் - தேற்றப் பொருள்
ஆல் - கருவிப் பொருள்

v) மாடு கன்று ஈன்றது
மாட்டுக் கன்று துள்ளி ஓடியது

(02 x0 5 = 10 புள்ளிகள்)

ஆ) i) வினையாலணையும் பெயர்

- வினையடியாகப் பிறந்து வினையையும் வினை புரியும் கருத்தாவையும் உணர்த்தும் பெயர் வினையாலணையும் பெயர் எனப்படும்.
- வினையாலணையும் பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கும்
- இது பின்வரும் அமைப்பை உடையது
  வினையடி + காலஇடை நிலை + படர்க்கை இடப்பெயர்
  உ-ம் - வந்தவனை / பாடித்தவன் / வந்தவை
- எதிர் மறை வினையாலணையும் பெயர்
  இதன் அமைப்பு
  வினையடி + எதிர்மறை இடைநிலை + படர்க்கை இடப்பெயர்
  உ-ம் : செய்யாதவன், பேசாதவை

agaram.lk

ii) கருவி வேற்றுமை

- இதனை மூன்றாம் வேற்றுமை என்பர்
- உருபு – ஆல், சொல்லுருபு – கொண்டு, மூலம்
- ஒரு பெயர்ச் சொல் வினை நிகழ்வுக்குரிய கருவியாக அல்லது கருத்தாவாகச் செயற்படுவதை இவ்வேற்றமை சுட்டும்.
- பொருள் - கருவி நான் சாவியால் கதவைத் திறந்தேன்
  கருத்தா சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது
- ஆல் உருபு மேலும் சில பொருள்களில் வரும் காரணப்பொருள் அவள் கவலையால் மெலிந்தாள்
  மூலப்பொருள் - தங்கத்தால் செய்த காப்பு

iii) பெயரடை

- பெயர்ச் சொல்லின் பண்பை உணர்த்தப் பயன்படும் அடைபெயரடை எனப்படும்
- எப்படிப்பட்ட என்னும் வினாவுக்கு விடையாக பெயரடை அமையும்
- பெயரடை அமைப்பு அடிப்படையில் இருவகைப்படும்
  i. தனிப் பெயரடை
     அடிச்சொல் + இய / அ
     புதிய, கரிய, சிறிய, நல்ல
  ii. ஆக்கப்பெயரடை
     பெயர் + ஆன / உள்ள அழகான, உயரமுள்ள (05 புள்ளிகள்)

(10 + 05 = 15 புள்ளிகள்)

agaram.lk